பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 89** **நாள்: 29.06.2018**

**சென்னை மாவட்டத்திற்குட்ட 16 சட்ட மன்ற தொகுதிகளிலும் 10.01.2018 அன்று வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலை அடிப்படையாக கொண்டு நகர்புறங்களில் 1400 வாக்காளர்களுக்கு மேல் உள்ள வாக்குசாவடிகளின் பிரிக்கும் பணி முடிவுற்று வரைவு வாக்குச்சாவடிகள் பட்டியல் 02.07.2018 அன்று வெளியிடப்படவுள்ளது. வரைவு வாக்குச் சாவடிகள் பட்டியல் குறித்து பொது மக்கள் தங்கள் ஆலோசனைகளை 02.07.2018 முதல் 09.07.2018 வரை தெரிவிக்காலம் என மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

******

சென்னை மாவட்டத்தில் உள்ள எண்.11 டாக்டர் இராதகிருஷ்ணன் நகர், எண்.12 பெரம்பூர், எண்.13 கொளத்தூர், எண்.14 வில்லிவாக்கம், எண்.15 திரு.வி.க.நகர், எண்.16 எழும்பூர் எண்.17 இராயபுரம், எண்.18 துறைமுகம், எண்.19 சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி, எண்.20 ஆயிரம்விளக்கு, எண்.21 அண்ணாநகர், எண்.22 விருகம்பாக்கம், எண்.23 சைதாப்பேட்டை, எண்.24 தியாகராயநகர், எண். 25 மைலாப்பூர், எண். 26 வேளச்சேரி ஆகிய 16 சட்டமன்ற தொகுதிகளிலும் 10.01.2018 அன்று வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்கள் எண்ணிக்கையினை அடிப்படையாக கொண்டு, நகர்புறங்களில் 1400 வாக்காளர்களுக்கு மேல் உள்ள வாக்கு சாவடிகளை பிரிக்கும் பணி 21.06.2018 முதல் தொடங்கி, மேற்படி தொகுதிகளில் பிரிக்கப்படும் வாக்குச்சாவடிகளின் விவரம் அடங்கிய வரைவு பட்டியல் 02.07.2018 அன்று வெளியிடப்படும் என்றும், மேலும், வெளியிடப்பட்ட வாக்குச்சாவடிகளின் விவரம் அடங்கிய பட்டியல் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகம்–4 (தண்டையார்பேட்டை), மண்டல அலுவலகம்–5 (இராயபுரம்), மண்டல அலுவலகம்–6 (திரு.வி.க.நகர்), மண்டல அலுவலகம்–8 (அண்ணாநகர்), மண்டல அலுவலகம்–9 (தேனாம்பேட்டை), மண்டல அலுவலகம்–10 (கோடம்பாக்கம்) மற்றும் மண்டல அலுவலகம்–13 (அடையாறு) ஆகியவற்றில் உள்ள வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களிலும், உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களிலும் உள்ள அறிவிப்பு பலகையில் விளம்பரம் செய்யப்படும் என்றும், மேற்படி தொகுதிகளில் அடங்கிய வாக்குச்சாவடி இணைத்தல், வாக்குச்சாவடி சேர்த்தல், வாக்குச்சாவடி இடமாற்றம், வாக்குச்சாவடி பெயர் மாற்றம் குறித்த ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் பொது மக்கள் தங்கள் தொகுதிக்குட்பட்ட மேற்படி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களில் 02.07.2018 முதல் 09.07.2018க்குள் அளிக்குமாறும், அனைத்து பொது மக்களும் மேற்படி வாய்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறும், மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**